**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC. 301/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.1 |
| Name | : | திருமதி.கனகம் |
| Father's Name/Husband Name: | | திரு. சௌந்தராஜன் |
| Village | : | மங்கூன் |
| Taluk | : | ஆலத்தூர் |
| Age | : | 56 /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 27.11.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 முதல் 5 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். கடந்த 04.12.2022ம் தேதி காலை 08.00 மணியளவில் ஞாயிற்று கிழமை அன்று எனது மாடு போஜன் என்பவரின் வயலில் பாதி வழியில் மேய்ந்து கொண்டு இருந்தது. எனது மாடு தொடர்ந்து அங்கு மேய்ந்து வருவதால் ராமன் செட்டியார் அந்த இடத்தில் முள் வேலி போட்டு இருந்தார். நான் அதை பிடிக்க சென்றேன். அப்போது ராமன் செட்டியார் வந்து இந்த பாதையில் எதற்காக மாடு மேய்க இருக்கிறீர்கள் என்ற கேட்டதற்கு நான் இது போஜனின் நிலம் தான் உங்களுடைய நிலம் இல்லை என்று சொன்னேன். பிறகு மற்றவர்கள் நிலத்திற்கு நீங்கள் ஏன் வேலி போட்டு வைத்து இருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு அவர் கையில் வைத்திருந்த குச்சியால் என் இடுப்பில் அடித்துவிட்டார். அவரின் மகன்கள் அண்ணாமலை, கோவிந்தன் ஆகியோர்கள் சம்பவயிடத்திற்கு வந்து என்னுடன் மாடு மேய்த்து கொண்டு இருந்த சுப்ரமணியனை அடித்தார்கள். எதிரிகள்

அனைவரும் என்னை கீழே தள்ளி தலையின் முடியை பிடித்து அடித்தார்கள். பிறகு அவர்கள் வைத்திருந்த நாயை அவிழ்த்துவிட்டார்கள். அந்த நாய் என் வலது கால் தொடையில் கடித்துவிட்டது. நான் அங்கிருந்து நடந்து வந்து எனக்கு தெரிந்த சரவணன் என்பவருக்கு போன் செய்து வரவழைத்து அன்றைய தினமே காரில் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். அங்கு நான் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சையில் இருந்த போது பாடாலூர் போலீசார் வந்து விசாரணை செய்தார்கள். நான் சம்பவம் குறித்து புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் அளித்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் எந்த குச்சியால் என்னை அடித்தார்கள் என்றால் அங்கு கிடந்த காட்டுக்குச்சியால் அடித்தார்கள். அந்த குச்சியின் நீளம் மற்றும் தடிமன் எவ்வளவு என்று என்னால் சொல்லமுடியுமா என்றால் குச்சியின் நீளம் எனது வலது கை முழுங்கையிலிருந்து இடது பக்க தோள்பட்டை வரை நீளம் இருக்கும். குச்சியின் தடிமன் 2 இஞ்சி இருக்கும் என்றால் சரிதான். எனக்கும் எதிரிகளுக்கும் பாதை சம்மந்தமாக முன்விரோம் இருக்கிறது என்றால் சரியல்ல. எனது புகாரில் கூறியுள்ள சங்கதிகளை தான் முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலீசார் என்னை எத்தனை முறை விசாரணை செய்தார்கள் என்றால் ஒரு முறை தான் விசாரணை செய்தார்கள். விசாரணை செய்த காவல் அதிகாரியின் பதவி குறித்து எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.